1994 மே 2]

கடினம் என்கின்ற காரணத்தினால்தான் அதைத் தவிர்க்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். இருந்தாலும் யோசிக்கலாம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்.463, திரு. வே. தம்புசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

463—

திருவாரூரிலிருந்து கோட்டூர் வரை சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்குதல்.

**** 20012—திரு. வே. தம்புசாமி:***

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூரிலிருந்து வடபாதிமங்கலாம் வழியாகக் கோட்டூர் வரை சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுப்பாலத்திலிருந்து கோட்டூர் வரை சாலை மிக மோசமாக இருந்ததால், பேருந்து திருவாரூரிலிருந்து வடபாதிமங்கலம் வழியாக விக்கிரபாண்டியத்திற்கு மாற்றி இயக்கப்பட்டது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூரிலிருந்து வடபாதிமங்கலம் வழியாக கோட்டூருக்கு சோழன் போக்குவரத்துக் கழகம் பேருந்தை இயக்கி வந்தது. இடையில் சாலைகள் சரியில்லை என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்தச் சாலைகள் தார்ச் சாலைகளாக போடப்பட்டு அவைகள் நன்றாக இருக்கின்றன. ஆகவே அந்த பஸ்களை மீண்டும் விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிறுத்தப்பட்ட காலம் 7-4-1991-லிருந்து வேறு வழித்தடங்களில் அந்தப் பகுதிகளுக்கு பேருந்துகளை நாங்கள் இயக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த பால வேலைகள்

முடியவில்லை என்றும் செப்பனிடவேண்டுமென்றும் கோப்பில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அது செப்பனிடப்பட்ட உடனேயே உறுப்பினர் கூறியதைப்போல அந்தப் பேருந்துகளை இயக்குவதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாட்டினால் சோழன் போக்குவரத்துக் கழகத்தினால் நிறுத்தப்பட்ட பஸ்கள் அனைத்தும் மறுபடியும் விடப்பட்டுள்ளதா? இல்லையென்றால் உடனடியாக விடப்படுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாடு இருந்ததன் காரணமாக சோழன் போக்குவரத்துக் கழகத்தில் 3 வழித்தடங்களைத் தவிர அனைத்து வழித்தடங்களிலும் நாங்கள் பேருந்துகளை இயக்கி இருக்கிறோம். இந்த மூன்று வழித்தடங்களிலும் பாலங்களும் சாலைகளும் சரியான நிலையில் இல்லாததாலும் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினாலும் அங்கே இயக்கமுடியவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சை மண்ணுக்கு வருகை தந்தபோது அங்கே இருந்த பழைய பேருந்துகளை உடனடியாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஒரே நாளில் 90 பேருந்துகளை நாங்கள் வாங்கினோம். புதிதாக 100 பேருந்துகள் வாங்கி, பழைய பேருந்துகளை மாற்றுவதற்காக ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 464, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

464—

பேருந்துகள் அதிக அளவு புகை வெளியிடுவதைத் தடுத்தல்.

** 21634—திரு. ஜெ. பாலகங்காதரன்:*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—